## வண்ணாரப்பேட்டை - விம்கோ நகர் இடையே

# புதிய வழித்தடத்தில் மெட்ரோ ரயில் சேவை தொடக்கம்

## கனவு திட்டம் நிறைவேறியதாக வடசென்னை மக்கள் மகிழ்ச்சி

■ சென்னை

வண்ணாரப்பேட்டை - விம்கோ நகர் இடையே புதிய வழித்தடத்தில் மெட்ரோ ரயில் சேவை தொடங்கியுள்ளதால், கனவு திட்டம் நிறைவேறியிருப்பதாக வடசென்னை மக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

சென்னையில் 2 வழித்தடங்களில், 32 மெட்ரோ ரயில் நிலையங்களுடன் மொத்தம் 45 கிமீ தொலைவுக்கு மெட்ரோரயில்கள் இயக்கப்பட்டு வந்தன. இதற்கிடையே, வண்ணாரப்பேட்டை - விம்கோ நகர் இடையே 9.05 கிமீ தூரத்துக்கு ரூ.3,770 கோடி மதிப்பிலான முதல்கட்ட விரிவாக்க திட்டப் பணிகளுக்கு முன்னாள் முதல்வர் ஜெயலலிதா கடந்த 2016-ல் அடிக்கல் நாட்டினார். அதன்படி, இந்தத் தடத்தில் ரயில் நிலையங்கள் அமைக்கும் பணிகள் நிறைவடைந்து, பாதுகாப்பு ஆணையர்கள் குழு ஆய்வு மேற்கொண்டு ஒப்புதலும் அளித்தது.

இந்நிலையில் நேற்று சென்னை வந்த பிரதமர் மோடி காணொலிக் காட்சிமூலம் புதிய ரயில் சேவையை தொடங்கி வைத்தார். வண்ணாரப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையத்தில் நடைபெற்ற திறப்பு விழாவில் அதிகாரிகள், அலுவலர்கள், பொது மக்கள் திரண்டனர். சேவை தொடங்கியவுடன், மலர்களால் அலங்காரம் செய்யப்பட்டு, பயணிகளோடு காத்திருந்த மெட்ரோ ரயில் புறப்பட்டு சென்றது.

இதையடுத்து பொதுமக்கள் உற்சாகத்துடன் கை தட்டி ஆரவாரம் செய்து, ஒருவருக்கொருவர் கை கொடுத்தும் இனிப்புகளை பரிமாறியும் மகிழ்ச்சி தெரிவித்தனர். அனைத்து நிலையங்களும் மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. மேலும், இரவு 11 மணி வரையில் இலவசமாக பயணிக்கலாம் என்பதால் கூட்டம் அலைமோதியது. குறிப்பாக, வடசென்னை புதிய தடத்தில் மக்கள் பயணித்து மகிழ்ந்தனர்.

புதிய சேவையை தொடங்கியதன் மூலம் மெட்ரோ ரயில் சேவையின் தூரம் 54 கிமீ ஆக உயர்ந்துள்ளது. மேலும் சென்னை சென்ட்ரல், எழும்பூர் ரயில் நிலையங்கள், கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையம், விமான நிலையம் உட்பட அனைத்து முக்கிய இடங்களையும் இணைக்கும் வகையில் மெட்ரோ ரயில் சேவை உருவெடுத்துள்ளது.

இதுதொடர்பாக புதிய மெட்ரோ ரயிலில் முதன்முறையாக பயணித்தவர்கள் கூறும்போது, "வடசென்னையில் இருந்து தென் சென்னைக்கு இனி போக்குவரத்து நெரிசல் இன்றி விரைவாக செல்ல முடியும். இப்பகுதி மக்களின் நீண்ட நாள் கனவுத் திட்டம் நிறைவேறி இருக்கிறது" என்றனர்.

### ஜெயச்சந்திரனின் பெயர்

வடசென்னை மக்கள் உரிமைக் கூட்டமைப்பு நிர்வாகிகள் எர்னஸ்ட் பால், மாரிமுத்து ஆகியோர் கூறும்போது "வடசென்னை ஏழை எளிய, நடுத்தர மக்கள் அதிகமாக வசிக்கும் பகுதி என்பதால் கட்டணத்தை குறைக்க வேண்டும். மக்கள் மருத்துவர் ஜெயச்சந்திரன் ரூ.5-க்கு மருத்துவம் பார்த்தார். அவரது சேவையை பிரதமர் மோடியே பாராட்டி பேசியுள்ளார். அவர் இந்த மெட்ரோ ரயிலுக்காக மக்களை திரட்டி பல்வேறு இயக்கங்களை நடத்தினார்.

எனவே, இந்த தடத்தில் உள்ள ஏதாவது ஒரு நிலையத்துக்கு மருத்துவர் ஜெயச்சந்திரனின் பெயரைச் சூட்ட வேண்டும்" என்றனர்.